# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்

# இயேசு கடலின் பெருங்காற்றை அடக்கினார்



எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Janie Forest
Alastair Paterson

தழுவியவர்: Ruth Klassen

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2022 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.



இயேசுவும்
அவருடைய
சீஷர்களும்
படவிலிருந்தபோது
பெருங்காற்று
வீசத்தொடங்கியது.
கலிலேயாக் கடல்
சீற்றத்தால்
அடிக்கத்தொடங்கியது.
இந்த விதமான
பெருங்காற்று
கப்பலை
உடைத்து,
அமிழ்த்திவிடும்.

சீஷர்கள் மிகவும் பயப்பட்டார்கள். அவைகள் படகை நீரால் நிரப்பிற்று. இந்த பெருங்காற்றின் மத்தியிலே, இயேசு தலையணையிலே நன்றாக நித்திரையாயிருந்தார். "ஆண்டவரே, ஆண்டவரே, நாங்கள் மடிந்து போகிறோம்!" என்று அழுதுகொண்டு இயேசுவை எழுப்பினார்கள்.



"அற்பவிசுவாசிகளே, ஏன் பயப்படுகிறீர்கள்?" என்று இயேசு சீஷர்களைக் கேட்டார். பின்பு இயேசு காற்றே வீசாதே என்று அதட்டினார். ... மற்றும் ... இயேசு நொறுக்கிய அலைகளை அமைதியாக இருக்கும்படி சொன்னார் ...



அப்பொழுது காற்று அமைதியாயிற்று ... கடல் சாந்தமுடன் நிசப்தமாகயிருந்தது. சீஷர்கள் ஆச்சரியப்பட்டு சொன்னார்கள், "இவர் யாராயிருக்கக் கூடும், காற்றும் கடலும் இவருக்கு கீழ்ப்படிகிறதே!"



கொஞ்சநேரத்திற்குப் பின்னர், இயேசு அநேக
வேலைகள் செய்து சுறுசுறுப்பாயிருந்தார்.
5000க்கும் அதிகமானோர் அவரைப்
பின் தொடர்ந்து வனாந்தரமான
இடத்திற்கு வந்தார்கள்.



ஒரு சிறு பையனின் மதிய உணவைக்
கொண்டு தேவனுடைய வல்லமையினாலே
இயேசு அவர்கள் எல்லோரையும்
போஷித்தார். இப்போது
சாயங்காலமாயிற்று.
இயேசுஎல்லோரையும்
திரும்ப
அனுப்பிவிட்டார்.



சீஷர்களும் அங்கிருந்து போக வேண்டியதாயிற்று. இயேசு அவர்கள் ஒரு படவில் ஏறி கலிலேயா கடற்கரையின் அடுத்த பகுதிக்கு தனக்கு முன்னால் போகச் சொன்னார்.





அவர்
எல்லோரையும்
அனுப்பிய
பின்னர், இயேசு
தனிமையாக
மலையின்
மேல் ஏறி
விண்ணப்பம்
பண்ண
ஆரம்பித்தார்.
சாயங்காலமானபோது,
அவர் அங்கே
தனிமையாகயிருந்தார்.



அங்கே கடலிலே,
சீஷர்கள் கடுங்காற்றிலே
அகப்பட்டுக்
கொண்டார்கள்.
அவர்கள் கடினமாக
அநேகநேரம் தண்டு
வலித்தும்,
அவர்களால்
அக்கரைப்பட
முடியாமற்
போயிற்று.



சீஷர்களுக்கு
தெரியாமற்
போயிற்று, அங்கு
அவர்களுக்கு
ஒரு ஆச்சரியம்
காத்திருந்தது.



அதிகாலையில்
மூன்று மணிக்கும், ஆறு
மணிக்கும் இடையில்
கடல் காற்றினால்
அலைப்பட்டிருப்பதற்க்கு
மத்தியில், சீஷர்கள்
கண்ட ஒரு காட்சியானது
அவர்களை பயப்பட
வைத்தது. "அது ஆவி"
என்று கதறினார்கள்.
ஆனால் அது இயேசு,
அவர்களுடைய பிரபுவும்,
ஆண்டவருமாயிருந்தவர்,
அவர்களை
நோக்கிப் பார்த்து,
தண்ணீரிலே
நடந்து வந்தார்.

"நல்ல உற்சாகத்துடன் இருங்கள்!" இயேசு அவர்களை கூப்பிட்டார். "நான் தான் பயப்படாதிருங்கள்." பேதுரு பதிலளித்தான், "ஆண்டவரே, அது நீராக இருந்தால், நான் தண்ணீர் மேல் நடந்து உம்மிடம் வரச்செய்யும்." ஆகையால் இயேசு சொன்னார், "வா" தைரியமாக, பேதுரு படவிலிருந்து வெளியே வந்தான், பின்பு இயேசுவை நோக்கி நடந்தான்.





ஆனால் அவன்
காற்றையும் வீசிய
அலைகளையும்
கண்டபோது,
பேதுரு பயந்து
நடுங்கி,
தண்ணீரிலே
அமிழ
ஆரம்பித்தான்.
"ஆண்டவரே,
என்னை
இரட்சியும்!"
என்று
கதறினான்.

உடனே, தன்னுடைய கையை நீட்டி பேதுருவை பிடித்துக் கொண்டார். "ஓ அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய்?" என்று கேட்டார். பின்பு இயேசுவும், பேதுருவும் படவிலே ஏறினார்கள், அப்போது காற்று நின்று போயிற்று.





அப்போது படவிலே
இருந்தவர்கள் அவரிடம் வந்து,
பணிந்து கொண்டு இயேசுவை
பார்த்து சொன்னார்கள்,
"உண்மையிலே நீர்தான்
தேவனுடைய குமாரன்".

# இயேசு கடலின் பெருங்காற்றை அடக்கினார்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

மத்தேயு 8, மத்தேயு 14,
மாற்கு 4, லூக்கா 8

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று  தேவனுக்குத் தெரியும்.  அவர் அதை பாவம் என்று கூறுகிறார்.  பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார்.  நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார்.  அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம்.  பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர்.  தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும்.  உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும்.  உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும்.  ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16